முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

OS.No.641/2019 பெயர் : ஷேக்அலாவுதீன் நாள் :27.11.2025

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

04.01.2025-ம் தேதி என் சகோதர, சகோதரிகளுடன் சேர்ந்து ஆரம்பித்த புதிய சங்கு பீடி கம்பெனியிலிருந்து அவர்களை வெளியேற்றிவிட்டு, நானே மேற்படி வியாபாரத்தை தனியாக நடத்தி வருகிறேன் என்றால், சரியல்ல, வாதி தான் நடத்தி வந்தார். வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் முதலீட்டையும், பீடி கம்பெனியின் கட்டிடத்தையும் நானே அபகரித்துக் கொண்டேன் என்றால், சரியல்ல, அனைத்து கட்டிடத்தின் சாவிகளும் வாதி சிராஜுதீன் வசம் உள்ளது. இந்த வழக்கை தாக்கல் செய்தபோது, முதன் முதலில் வழக்கறிஞர் திரு.V.R.சிவசுப்பிரமணியம் என்பவரை நியமித்தேன் என்றால், சரிதான். எனது மகன்கள் 4,5 பிரதிவாதிகள் வழக்கில் எதிர்வாதம் செய்ய முன்வராததால், ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளன என்றால், சரிதான். அதன்பின்னிட்டு எனக்கும், 4, 5 பிரதிவாதிகளுக்கும் சேர்ந்து வழக்கறிஞர் திரு.ரவீந்திரன் அவர்களுக்கு வக்காலத்து தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். 6-ம் பிரதிவாதியாகிய எனக்காக வழக்கறிஞர் திரு.ரவீந்திரன் அவர்களால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி எதிர்வழக்குரையை 4, 5 பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்வதாக மேற்குறிப்பு செய்யப்பட்டது என்றால், சரிதான். 4,5 பிரதிவாதிகள் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கை மேல்நடத்த என் மகன்கள் 4,5 பிரதிவாதிகளுக்கு விருப்பம் இல்லாததாலும், நான் வாதியைப் பற்றி பொய்யான குற்றச்சாட்டுகளையும், அவதூறுகளையும் கூறியதாலும், என் தாயார் நூர்ஜகான் தங்களுக்கு வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சரிசமமாக 5-ல் 1 பங்கு தாவா

சொத்தில் கொடுத்தது போல், தங்களுக்கும் கொடுத்து விட்டதால், எதிர்வாதம் செய்ய விருப்பம் இல்லை என்றால், வாதியின் தவறான நடவடிக்கையால், எனது தந்தை வாதிக்கு கம்பெனியில் நிர்வாகத்தையோ, சொத்துக்களையோ எந்தவிதமான பங்குகளையும் அளிக்கவில்லை. 4,5 பிரதிவாதிகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், அவர்கள் சாட்சியம் சொல்ல முன்வரவில்லை என்றால், அவர்கள் வெளியூரில் இருந்த காரணத்தினால், நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை. எனது மகன்கள் 4,5 பிரதிவாதிகள் இந்த வழக்கை நடத்துவதற்கு விருப்பம் இல்லை என்பதால், நான் மட்டும் வழக்கறிஞர் திரு.சரவணன் என்பவரை நியமித்து, அவர் மூலமாக 18.08.2023-ம் தேதிய கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், சரிதான். அந்த கூடுதல் எதிர்வழக்குரையில் பத்தி 1,3,4,5,6 பத்திகளில் இந்த வழக்கைப் பற்றி எதுவும் தெரிவிக்காமல், வாதியைப் பற்றி அவர் வேலை வெட்டி இல்லாத ஊதாரி, ஒரு ரூபாய் கூட சம்பாதிக்கும் திறமையற்றவர், பெண்களிடம் தவறாக நடப்பவர் என்பதால், சகோதர, சகோதரிகள் கூட தங்கள் வீட்டில் அவரை அனுமதிக்க மாட்டார்கள் என்ற பொய்யான அவதூறுகளை மட்டுமே கூறி அந்த கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. எனக்கு என் முதல் மனைவி காமீலா பானு உயிரோடு இருக்கும் போதும், எனக்கு வயது வந்த 2 மகன்கள் இருந்தபோதும், லோகாம்பாள் என்ற தங்கமணி என்பவருடன் தகாத உறவு ஏற்படுத்திக்கொண்டிருந்தீர்கள் என்றால், சரியல்ல. அவருக்கும், எனக்கும் சஜீத்ராஜா என்ற ஒரு மகன் பிறந்து, தற்போது ஈரோடு இந்தியன் பப்ளிக் ஸ்கூலில் படித்து வருகிறார் என்றால், தவறு. மேற்படி என்னுடைய செய்கையால், என்னுடைய பெற்றோர்கள் அவர்களுடைய வீட்டிற்கு வர என்னை அனுமதிக்கவில்லை என்றால், சரியல்ல. என் மனைவியையும், என் 2 மகன்களையும் என் பெற்றோர் தான் நல்ல விதமாக பராமரித்து, ஆளாக்கிவிட்டனர் என்றால், தவறு, என் தாய் தந்தையரை 30 ஆண்டு காலமாக நான்தான்

பராமரித்து வந்தேன். என் பெற்றோரை நான் பராமரித்து வந்ததாக சொல்வது பொய் என்றாலும், என் தந்தை இறக்கும் வரை 2013-ம் ஆண்டு வரை அவர்களின் வீட்டிற்குள் வர என்னை அனுமதிக்கவில்லை என்றால், அது முற்றிலும் தவறு. எனக்கு லோகாம்பாளிடம் இருந்த பழக்கத்தின் காரணமாக தான் என் தாயார் தாவா ஆ அட்டவணை சொத்தைப் பொறுத்து என் இரு மகன்களுக்கு மட்டும் 5-ல் 1 பாகம் தாவா சொத்தில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால், என் தாயார் எழுதி வைத்த தானசெட்டில்மெணட் ஆவணம் தவறானது, என் தந்தை தான் எனது தாயார் பெயரில் எழுதி வைத்தார். என் தகப்பனார் 2013-ம் வருடம் இறந்த பிறகு, 2014-ம் வாக்கில் என் தாயார் நோய்வாய்ப்பட்டார் என்றால், என் வீட்டில் இருந்தவரை நன்றாக தான் இருந்தார். நான் எனது கட்சி ஆட்களையும், என் அம்மா வீட்டில் விட்டு என் தாயாரை மிகவும் திட்டி, சரிவர உணவு கொடுக்காததால், என் தாயார் மிகவும் மனவேதனை அடைந்தார், அதனால், தனது மகன் சியாபுதீன் வீட்டில் தங்கி கொண்டு, 3-ம் பிரதிவாதியாகிய தனது மகளின் கணவர் ஆகிய டாக்டர் சமத் என்பவரின் மருத்துவ பாதுகாப்பில் இருந்து கொண்டு, வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் மருத்துவ செலவுகளை ஏற்று, தனது தாயாரை பாதுகாத்து வந்தனர் என்றால், சரியல்ல. நான் எனது தாயாரை சரிவர கவனிக்காமல், மிகவும் மோசமாக நடத்தியதால், தனது 3-வது மகன் (2-ம் பிரதிவாதியை) வரவழைத்து அவருடன் சென்று மருத்துவ சிகிச்சை செய்துக்கொண்டார் என்றால், சரியல்ல. எனது தாயார் 14.04.2016-ம் வருடம் இறந்து விட்டார் என்றால், சரிதான். இறந்த என் தாயாரை அவருடைய சொந்த வீட்டிலேயே உடலை வைத்து பாத்தியா செய்ய அனுமதிக்கவில்லை என்றால், 2-ம் பிரதிவாதி சியாவுதீன் வீட்டிற்கு என் தாயாரின் உடலை எடுத்து சென்று விட்டார்கள், நான் அனைத்து பிரார்த்தனைகளிலும் கலந்து கொண்டேன். நான் கலந்து கொண்டதாக சொல்வது பொய் என்றாலும், என்

தாயாரின் 10-வது, 20-வது, 30-வது, 40-வது பாத்தியாவில் கலந்து கொள்ளவில்லை என்றாலும், அது தவறு. எனது இரு மகன்கள் மட்டும் சியாவுதீன் வீட்டிற்கு சென்று, மேற்படி என் தாயாரின் 10-வது, 20-வது, 30-வது, 40-வது பாத்தியாவில் கலந்து கொண்டார்கள் என்றால், அது தவறு, நான் அனைத்திலும் கலந்து கொண்டேன். என் தாயாரின் 10-வது, 20-வது, 30-வது, 40-வது பாத்தியாவிற்கான செலவுகள் ரூ.1,25,000/-த்தில் எனது பங்கை கொடுக்கவில்லை என்றால், ரூ.1,25,000/-ம் கம்பெனியில் இருந்து எடுத்து தான் செலவு செய்யப்பட்டது, யாரும் சொந்த பணத்தில் செலவு செய்யவில்லை. என் தாயார் தாவா சொத்தில் பங்கு கொடுக்காத கோபத்தில், அவரது உடலை தாவா சொத்தில் வைக்க அனுமதிக்காமலும், அனைத்து பாத்தியா கூட்டங்களிலும் கலந்து கொள்ளாமலும், எனது தாயாரை அவமதித்தேன் என்றால், சரியல்ல.

பாத்தியாவிற்கு முன்பு வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் அவர்களது உடைமைகளை தாவா சொத்திலிருந்து எடுத்துக்கொண்டால்தான், பாத்தியா கூட்டங்களில் கலந்து கொள்வேன் என்றதால், அவர்கள் தங்களது உடைமைகளை பாத்தியா கூட்டங்களுக்கு முன்பு எடுத்து சென்று விட்டனர் என்றாலும், அவர்கள் தங்களது உடைமைகளை என் அறிவுறுத்தலின் படி எடுத்து சென்ற பிறகு, பாத்தியா கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாது என்று கூறி ஏமாற்றி விட்டீர்கள் என்றால், சரியல்ல, 1, 3 பிரதிவாதிகள் 1983 மற்றும் 1996-ல் திருமணம் செய்து சென்று விட்டதால், அவர்கள் உடைமைகள் எதுவும் வீட்டில் இல்லை. வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி என் தாயார் எனது இரண்டு சகோதரிகள் மற்றும் 2 சகோதரர்கள் மற்றும் எனது 2 மகன்களுக்கும் தாவா வீட்டை பங்கு பிரித்து, அவரவரர் சுவாதீனத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை விட்டுவிட்டார்கள், அந்த பகுதியில் வைக்கப்பட்ட உடைமைகள் தான் என்

தாயார் இறந்த பிறகு நான் சொன்னதால், எடுத்து சென்று விட்டார்கள் என்றால், அது தவறு, அந்த பத்திரத்திம் பொதுவில் எழுதப்பட்டது. என் தாயார் இறந்த பிறகு தாவா வீட்டிலிருந்து வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளை வெளியேற்றி விட்டு, வீட்டின் முன்புறம் கருப்பு, சிவப்பு வர்ணத்தில் கட்சி நிறத்தை அடித்தேன் என்றால், என் தந்தை அந்த கட்சியை சேர்ந்தவர் என்பதாலும், அவர் காலத்தில் இருந்தே, அந்த வர்ணம் அடிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கு தாய் தகப்பனார் இறக்கும் போதே தாவா சொத்து நல்ல கட்டிடமாக தான் இருந்தது, அதற்கு பராமரிப்பு எதுவும் தேவைப்படவில்லை, தாவா சொத்தை பராமரிப்பு செய்ய வேண்டும் என்றால், வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் அனுமதியைப் பெற்று தான் கட்டிடத்தின் பராமரிப்பு பணியை செய்யவேண்டும், ஆனால் நான் கூறுவது போல் கட்டிட பராமரிப்பு செய்வதற்கு வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் எவ்வித வாய்மொழி மற்றும் எழுத்துப்பூர்வ அனுமதி பெறவில்லை என்றால், வாதியை தவிர்த்து 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் வாய்மொழி அனுமதி பெற்று தான் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. எனது சகோதரி 1-ம் பிரதிவாதி மும்தாஜ்பேகம் இந்த வழக்கில், எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார், அந்த எதிர் வழக்குரையில் வாதிக்கு ஆதரவாக தான் தாவா சொத்தில் தாயாரின் தான செட்டில்மெண்ட் படி சம்மதம் தெரிவித்துள்ளார் என்றால், எதிர்வழக்குரை ஆங்கிலத்தில் இருந்ததால், அதில் உள்ள சங்கதிகள் தனக்கு தெரியாது என என்னிடம் தெரிவித்தார்.

மேற்படி சங்கதியை நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றிதழில் புகைப்படங்கள் சம்மந்தப்பட்ட பென்டிரைவ், லேப்டாப் மற்றும் பிரிண்டர் சம்மந்தப்பட்ட தரவுகளைப் பற்றிய விபரங்கள் நான் அளித்த பிரிவு 63BSA-ன் படியான சான்றிதழில் அளிக்கவில்லை என்றால், சரியல்ல, கொடுக்கப்பட்டது. எனவே, நான்

தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள், பென்டிரைவ், லேப்டாப் மற்றும் பிரிண்டர் ஆகியவை ஏற்றுக்கொள்ளகூடியதல்ல என்றால், சரியல்ல. எனவே வாதி கோரியப்படி தாவா சொத்தில், நான் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்து, அனுபவித்து வருவதால், வாதிக்கான 5-ல் 1 பங்கு நஷ்ட ஈட்டை கொடுக்கும்படியும், தாவா சொத்தில் தாயாருடைய தானசெட்டில்மெண்ட் படி 5-ல் 1 பங்கு அல்லது மாற்றுப்பரிகாரமாக நஷ்ட ஈடு, மற்றும் 4-ல் 1 பாகம் தாவா சொத்தில் வாதிக்கு ஒதுக்கி கொடுக்கும்படி வாதி தாக்கல் செய்துள்ள தாவா அனுமதிக்கப்படவேண்டும் என்றால், சரியல்ல. என் சகோதரன் என்னைப்பற்றி அவதூறு கூறியதால், அவரைப்பற்றி தவறாக குறிப்பிட்டு, தாக்கல் செய்துள்ள எதிர்வாதம் தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால், சரியல்ல.